**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**2025–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10–ம் நாள் புதன்கிழமை**

**இ.ஏ.எண்.1/2025**

**இன்**

**இ.பி.எண்.8/2024**

Dr.V.வீரகுருநாதன்
த/பெ.வீரபிரகாசம்,
CECRI குடியிருப்பு, மண்டபம் கேம்ப்,
இராமநாதபுரம். .....மனுதாரர்

**/எதிர்/**

1.புவனேஸ்வரி
விவாகரத்து ஆனவர், க/பெ.வீரகுருநாதன்,
த/பெ.முருகேசன்.

2.மைனர் விக்னேஸ்வரி
த/பெ.வீரகுருநாதன்,

3.மைனர் வீர ஹரி பிரகாஷ்
த/பெ.வீரகுருநாதன்,

மைனர்களாகிய 2 மற்றும் 3 நபர்களின்
தாயார் மற்றும் பாதுகாவலர்
புவேனஸ்வரி மூலமாக
....எதிர்மனுதாரர்

இவ்வழக்கானது 08.12.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.நிக்சன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தில் விசாரணை இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>உத்தரவு</u>

மனுதாரர் இந்த மனுவை உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு பிரிவு 151 ன் கீழ் 20.09.2025ம் தேதியன்று எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்து கொள்வதற்காக அசல் மனுவினை Reopen செய்து உத்தரவு பிறப்பிக்ககோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u> :-**

2,3 எதிர்மனுதாரர்களுக்கு செலுத்திய பள்ளி கட்டணம் ரூ.3,62,281/-ஐ மனுதாரரிடம் வசூல் செய்து கொடுக்கும் படி அசல் நிறைவேற்றுதல் மனுவினை 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 20.08.2025ம் தேதியன்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வெளியூர் சென்ற காரணத்தினால் அன்றைய தினம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், 20.09.2025ம் தேதியன்று எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்து கொள்வதற்காக அசல் மனுவினை Reopen செய்து உத்தரவிடக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>**

எதிர்மனுதாரர் தனது இரண்டு இளவர்களையும் வீட்டில் தனியாக விட்டு விட்டு பராமரிப்பில்லாமல் நேரடியாக நீதிமன்றத்திற்கு 1200கீ.மீ பயணம் செய்து வருவது மிகவும் கஷ்டமாக உள்ளது எனவும், EP.No.8/2025 இன்னும் ரூ.3,63,281/- பாக்கி வைத்துள்ளதாகவும், மேற்படி பணத்தை தவிர குழந்தைகள் பள்ளி மற்றும் இதர கட்டணங்களை கடன் வாங்கி கட்டியுள்ளதாகவும், வழக்கு சம்மந்தமாக இதர செலவுகளையும் மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ரசீதின் பணத்தை கட்டும் பட்சத்தில் காணொளி வாயிலாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**4) <u>பிரச்சினை</u> :-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5) **<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :-**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) நிறைவேற்றுதல் மனுவில் தீர்ப்பாண பெற்றவர் கடந்த 19.07.2025ம் தேதியன்று முதல் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் 31.07.2025, 11.08.2025,

20.08.2025 ஆகிய தேதிகளில் வாய்ப்பளித்தும், மனுதாரர் எதிர்மனுதாரரைகுறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் உத்தரவு பிறப்பிக்கட்டுள்ளதை மீண்டும் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை மேற்கொள்வதற்காக இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்டால் மட்டுமே மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலும் என்ற காரணத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது அனுமதித்து செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ஆம் ஆண்டு டிசம்பர் 10ம்நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.12.10 10:25:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி :-** **இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணம் :-** **இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம் :-** **இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.12.10 10:25:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
இ.ஏ.எண்.1/2025

இன்

இ.பி.எண்.8/2024

நேரிய/வரைவு உத்தரவு
நாள்:10.12.202